# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2021** **ஆண்டு எட்டு**

அனைவருக்கும் வணக்கம்

## காலம் பொன்னானது

“காற்றுள்ள போதே தூற்றிக்கொள்” என்கிறது பழமொழி ஒன்று. இப்பழமொழி, எந்த ஒரு செயலையும் காலத்தே செய்ய வேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டது. காலத்தின் அருமையை மக்கள் உணர வேண்டும். இளமைப்பருவத்தில் காலத்தை வீணாக்குதல் கூடாது.

“இளமையில் கல், பருவத்தே பயிர் செய்” என்பதற்கமைய இளமைப்பருவம் கல்விக்குரியது. அப்பருவத்தை யாரும் வீண் செய்தல் கூடாது.

மழைக்காலத்தில் விதைக்க வேண்டும். அப்போது தான் பயிர் நன்றாக வளர்ந்து தக்க பலனைத் தரும். விதைக்க வேண்டிய காலத்தில் விதைக்காமல் அறுவடைக்கு மட்டும் சென்றால் எதுவும் கிடைக்காது அல்லவா?

மாணவன் தன் பெற்றோருக்கும் உற்றாருக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் கல்வி கற்க வேண்டிய கடமைகளையும் செவ்வனே செய்ய வேண்டும். இன்றைய போட்டி மிக்க உலகில் ஒரு நொடிப் பொழுதையும் நாம் வீணாக்கக்கூடாது. காலத்தில் உழைத்தால்தான் அதன் பயனை அடைய முடியும். காலம் மீண்டும் வராது.

ஒவ்வொரு நாட்டிலும் சாதனையாளராகத் திகழ்ந்தவர்கள் எல்லாம் காலத்தை சிறப்பாகப் பயன்படுத்தியவர்களே.

ஒருவர் குறித்த காலத்தில் குறித்த வேலையை செய்து முடிக்கும் பழக்கத்தைக் கொண்டடவராக இருத்தல் வேண்டும். பொழுதுபோக்கு என்ற பெயரில் அருமையான காலத்தை தேவையற்ற காரியங்களில் வீணாக்கக்கூடாது.

ஓட்டப்பந்தய வீரன் ஒரு நொடியைத் தவற விட்டாலும் தங்கப்பதக்கத்தை இழக்க நேரிடும். சில வினாடிகள் தான் என்று கூட அலட்சியம் செய்யாமல் காலத்தில் காரியம் ஆற்ற வேண்டும்.

நன்றி
வணக்கம்